பக்கங்கள் 17 + 04

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## ஒரு இலட்சம் மாணவர்களுக்கு ஜனாதிபதி புலமைப்பரிசில்கள்

### 360 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பேரில் பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு ஊக்குவிப்புகளை வழங்கும் நோக்கில் ஜனாதிபதி நிதியம் 04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மாசி 13 ஞாயிற்றுக்கிழமை 25.02.2024 அதிர்வு 209



# தமிழினத்துக்குத் துரோகம் செய்துகொண்டு தமிழ்த் தேசியக் கட்சிகளுக்குள் இருக்காதீர்!

## தென்கயிலை ஆதீன முதல்வர் இடித்துரைப்பு

(பிரபாகரன் டிலக்சன்)

"தமிழினத்துக்கும் தமிழ்த் தேசியத்துக்கும் துரோகம் செய்துகொண்டு தமிழ்த் தேசியக் கட்சிகளுக்குள் இருக்க வேண்டாம். அது எமது தமிழின இருப்பைச் சிதைக்கும்."

- இவ்வாறு தென்கயிலை ஆதீன முதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளார் தெரிவித்தார்.

"தடைகளை வெல்லும் தமிழ்த் தேசியம்" எனும் தொனிப்பொருளில் தமிழ்த் தேசிய எழுச்சி நாள் நிகழ்வு இன்று யாழ். கொடிகாமத்தில் இடம்பெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 04

# அம்பாந்தோட்டை துறைமுகத்தை மியன்மார் துறைமுகத்துடன் இணைப்பதற்குத் திட்டம்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

அம்பாந்தோட்டை பிரதேசத்தில் உட்கட்டமைப்பு வசதிக்காக ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ள பாரிய முதலீடுகளை தேசிய பொருளாதாரத்துக்கு நன்மை பயக்கும் வகையில் தொடர்ச்சியாகப் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை மியன்மார் துறைமுகத்துடன் இணைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும், அதனை கிழக்கு சீனாவின் சோங்கிங் துறைமுகம் வரையில் விரிவுபடுத்திப் பின்னர் ஆபிரிக்கா வரை அதனை மேலும் விரிவுபடுத்த எதிர்பார்க்கப்படுவதாகவும் குறிப்பிட்ட 03



உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally





# தமிழ்த் தேசிய எழுச்சி நாள் நிகழ்வு

**(பிரபாகரன் டிலக்சன்)**

தமிழ்த் தேசிய எழுச்சி நாள் நிகழ்வு இன்று யாழ்ப்பாணம் – கொடிகாமத்தில் நடைபெற்றது.

“தடைகளை வெல்லும் தமிழ்த் தேசியம்” எனும் தொனிப்பொருளில் தமிழ்த் தேசிய எழுச்சி நாள் நிகழ்வு இன்று முற்பகல் 10.30 மணியளவில் கொடிகாமத்தில் அமைந்துள்ள தனியார் மண்டபத்தில் ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் தென்கயிலை ஆதீனம் தவத்திரு அடிகளார், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சீனித்தம்பி யோகேஸ்வரன், ஞானமுத்து சிறீநேசன், பாக்கியசெல்வம் அரியேந்திரன், கவீந்திரன் கோடீஸ்வரன் மற்றும் அரசியல் பிரமுகர்கள், பொது மக்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது அதிதிகளின் உரைகளும், தமிழ்த் தேசியம் சார்ந்த கலை, கலாசார நிகழ்வுகளும் இடம் பெற்றன.










# ஜூலையில் நாடாளுமன்றம் கலைப்பு?

எதிர்வரும் ஜூலை மாதமளவில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு முதலில் பொதுத் தேர்தல் நடத்தப்படலாம் என்று அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

புலனாய்வு அமைப்புகளின் அறிக்கை மற்றும் உள்ளக கருத்து கணிப்புகளை அடிப்படையாகக்கொண்டே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த முடிவை எடுத்துள்ளார் எனவும் தெரியவருகின்றது.

எதிர்வரும் செப்டெம்பர் 18 மற்றும் ஒக்டோபர் 18 இற்கு இடைப்பட்ட காலப் பகுதிக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும். இதற்காக வரவு – செலவுத் திட்டத்தில் 10 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

எனினும், அதற்கு முன்னர் பொதுத் தேர்தலை நடத்தினால் அதற்கான நிதி எவ்வாறு ஒதுக்கப்படும் என கேள்வி எழுப்பப்படுகின்றது. குறைநிரப்புப் பிரேரணையொன்றை நாடாளுமன்றத்தில் முன்வைத்து நிதியைப் பெறலாம் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

அதேவேளை, பொதுத் தேர்தல் நடைபெற்று முதல் தடவையாக நாடாளுமன்றம் கூடி இரண்டரை வருடங்கள் சென்ற பின்னர் அதனை எந்நேரம் வேண்டுமானாலும் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது. ஆனால், இடைக்கால ஜனாதிபதி அதாவது நாடாளுமன்றம் ஊடாகத் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதிக்கு நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் முடிவடைவதற்கு முன்னர் அதனைக் கலைக்கும் அதிகாரம் உள்ளதா என்ற சட்ட ரீதியிலான சர்ச்சையையும் சிலர் கிளப்புகின்றனர்.

## அம்பாந்தோட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி, அம்பாந்தோட்டையை நாட்டின் பிரதான பொருளாதார மையமாக மாற்றுவதற்கான சாத்தியக்கூறுகளையும் சுட்டிக்காட்டினார்.

மேற்கு, கிழக்கு மற்றும் அம்பாந்தோட்டை நகர அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக அண்மையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைச் சுட்டிக்காட்டினார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு இன்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நகரம் உட்பட மேல் மாகாணம், கிழக்கு மாகாணம் மற்றும் அம்பாந்தோட்டையில் சுற்றுலா வலயங்கள் தொடர்பான மூலோபாய அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் நகர அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து இதன்போது விரிவாக ஆராயப்பட்டதுடன் புதிய முதலீட்டு வாய்ப்புகளும் தொடர்பிலும் ஆராயப்பட்டன.

மொனராகலை பிரதேசத்தில் மேலதிகமாகக் காணப்படும் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளைப் பயன்படுத்தி புதிய முதலீட்டு வலயங்களை உருவாக்கும் திட்டம் குறித்தும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும், நகர நெரிசலைக் குறைப்பதற்காக அவிசாவளை மற்றும் எஹெலியகொட உட்பட பிரதேசங்களின் மூலோபாய திறன்களைப் பயன்படுத்தி புதிய நகரங்களை அபிவிருத்தி செய்வதன் முக்கியத்துவத்தையும் இதன்போது ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

புதிய முதலீட்டு வாய்ப்புகளை ஈர்த்து, பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தும் நோக்கில் வட கொழும்பு துறைமுகத்தை விரிவுபடுத்துதல் மற்றும் தொழில்துறை மற்றும் தகவல் தொழில்நுட்ப பூங்காக்களை நிர்மாணித்தல் தொடர்பான திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இந்தியாவின் உதவியுடன் திருகோணமலையை முக்கிய முதலீட்டு வலயமாக அபிவிருத்தி செய்யும் திட்டம் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. திருகோணமலை நகர அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குக் கூட்டுக் குழுவொன்றை நியமிப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, பொருளாதார வளர்ச்சி மற்றும் பிராந்திய ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவதற்கு இந்திய – இலங்கை இருதரப்பு ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன உட்பட அமைச்சுகளின் செயலாளர்கள், பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க மற்றும் குறித்த மாவட்ட செயலாளர்கள், அரச அதிகாரிகள் உள்ளிட்ட பலர் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.














# நுவரெலியாவில் குதிரை ஓட்டப் போட்டி

(ஆ.ரமேஸ்)

இலங்கைக்கு வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்கும் நோக்கில் விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவின் ஆலோசனைக்கமைய 'ரோயல் டேர்' கிளப்பால் நுவரெலியாவில் குதிரை ஓட்டப் போட்டி இன்று நடத்தப்பட்டது.

நுவரெலியா குதிரைப் பந்தய திடலில் இடம்பெற்ற இந்த ஓட்டப் போட்டியில் நான்கு சுற்றுப் போட்டிகள் நடைபெற்றன.

முதலாவது மற்றும் இரண்டாவது சுற்றுப் போட்டிகளில் அசராங்க மற்றும் பிரபா ஜெயரத்தின ஆகிய குதிரை பந்தய உரிமையாளர்களின் சார்பாகப் போட்டியில் பங்குபற்றியிருந்த குதிரை ஓட்ட வீரர் பி.விக்ரமன் என்பவர் வெற்றி பெற்றார்.

அதேநேரத்தில் இடம்பெற்ற மூன்றாவது மற்றும் நான்காவது சுற்று குதிரை ஓட்டப் போட்டியில் எல்.ரவிக் குமார் மற்றும் பி. எஸ் கவிராஜ் ஆகியோர் வெற்றி பெற்றிருந்தார்கள்.

இவ்விரு போட்டியாளர்களும் திரு. திருமதி எட்வர்ட் என்பவரின் குதிரைப் பந்தயத்தின் உரிமையாளர் சார்பாகப் போட்டியில் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் போட்டி நிகழ்வில் வெளிநாட்டுப் பயணிகள் பார்வையாளர்களாகக் கலந்துகொண்டதுடன், பல முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர்.







## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### ஒரு இலட்சம்...

"ஜனாதிபதி கல்வி புலமைப்பரிசில் 2024/2025" திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

இதன்படி, மொத்தமாக இலங்கையில் உள்ள 10 ஆயிரத்து 126 பாடசாலைகளையும் உள்ளடக்கிய வகையில், தரம் 01 முதல் தரம் 11 வரை கல்வி கற்கும் ஒரு இலட்சம் (100,000) மாணவர்களுக்கு, வருடாந்தம் இந்த நிதியுதவித் திட்டத்தை நடைமுறைப் படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், இந்த முழுமையான திட்டத்துக்கும் 360 கோடி ரூபாவை ஜனாதிபதி நிதியம் ஒதுக்கி யுள்ளது.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமையைக் கருத்தில்கொண்டு, குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் குடும்பங்களில் உள்ள மாணவர்கள் எதிர்நோக்கும் பாடசாலை உபகரணங்கள், பயிற்சி புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக்கொள்ளல் போன்ற விடயங்களில் நிலவும் சிரமங்களுக்கு ஓரளவு நிவாரணம் வழங்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

ஒவ்வொரு பாடசாலையிலும் மிகக் குறைந்த வசதிகளின் கீழ் கல்வி கற்கும் திறமையான மாணவர்களைத் தெரிவு செய்து, அந்தப் பிள்ளைகளுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் இந்நாட்டு மாணவர்களுக்கு தொடர்ச்சியான பாடசாலைக் கல்வியை வழங்கி, அதன் ஊடாக நாட்டின் மனித வளத்தை மேம்படுத்த முதலீடு செய்வதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எதிர்பார்ப்பாகும்.

இதன்படி, இந்தப் புலமைப்பரிசில் பெறுவோரைத் தெரிவு செய்யும் செயல்முறை மற்றும் அது தொடர்பான அனைத்து தகவல்களும் ஜனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கமான www.facebook.com/president.fund மூலம் எதிர்வரும் நாட்களில் அறிவிக்கப்படும்.

### தமிழினத்துக்குத்...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அரசியல் தீர்வை சர்வதேசத்திடம் வலியுறுத்தல் என்பது எவ்வளவு அவசியமானதோ அந்தளவுக்கு அரசியல் கட்சிகளின் ஒற்றுமையும் மிகமிக அவசியமானது. கூட்டாக இருந்த கட்சிகள் பிரிந்த காலம் போய் ஒரு கட்சிக்குள்ளேயே பெரும் பிளவு ஏற்பட்டிருக்கின்றது. தமிழர்களுக்கு என்ன தீர்வு வேண்டும் என்பதை கட்சிகள் தங்களுக்கு ஏற்றால் போல் முடிவு செய்கின்றன. தமிழ்த் தேசியக் கட்சிகளிடம் சில கேள்விகளை கேட்க விரும்புகின்றேன்.

நீங்கள் தமிழ்த் தேசியத்தை நேசிக்கின்றீர்களா? தமிழ்த் தேசியத்தை ஒவ்வொரு கட்சிகளும் எப்படிப் பார்க்கின்றீர்கள்? ஒவ்வொரு கட்சிக்குள்ளும் உள்ளவர்கள் ஒன்றுக்கொன்று முரணான வெவ்வேறு கருத்துக்களை வெளிப்படுத்தும்போதும் தேசியத்துக்கு விரோதமான கருத்துக்களைத் தெரியப்படுத்தும்போதும் கட்சியின் நிலைப்பாடு என்ன? நீங்கள் மக்களை ஒரு பொருட்டாகக் கருதுகின்றீர்களா? அப்படி நீங்கள் கருதினால் அரசியல் அரசியல் அறிவு, தமிழ்த் தேசியம் சார்ந்தவர்களிடம் இருந்து வருகின்ற கருத்துக்களையும் உள்வாங்கி உங்களது பார்வையைச் செப்பனிடுகின்றீர்களா?

உங்களுக்குள் இருக்கும் களைகளை ஏன் முளையிலேயே பிடுங்கத் தவறுகின்றீர்கள்? எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை எப்படிக் கையாளப் போகின்றீர்கள்? ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமாக என்ன முடிவுகளை நோக்கி மக்களை நகர்த்தப் போகின்றீர்கள்? அந்த முடிவு சர்வதேசத்திடம் எமக்கான தீர்வுக்கான செய்தியாக அமையுமா?

நீங்கள் எடுக்கப் போகும் முடிவு தமிழ்த் தேசியத்தைச் சிதைக்காது எம்மைச் சர்வதேசம் நோக்கி வெளிப்படுத்த உதவுமா? இன்று இடம்பெறுகின்ற மண் பிடிப்பு, மதம்சார் நிலம் பிடிப்பு ஆகிய பல்வேறு ஆக்கிரமிப்புக்கள் நிகழும்போது மௌனமாக இருப்பது ஏன்? இந்த அநீதிக்கு எதிராக தீவிரமாக முன்நின்று செயற்படுபவர்களும் தங்களுடைய நிலையை மாற்றிக்கொள்வது எதற்காக? சர்வதேச நாடுகள் உங்களைக் கையாளுகின்றனவா? இந்தக் கையாடல் தமிழ்த் தேசியத்தையும் தமிழர்களின் எதிர்காலத்தையும் சிதைக்கும் நிலையில் நீங்கள் எவ்வாறு அதனைக் கையாளப் போகின்றீர்கள்?

கட்சித் தலைமை பிழையான வழி நடத்தலைச் செய்கின்றது என்றபோதும் உங்களது மௌனம் அதை ஏற்றுக் கொள்வதாக நாம் எடுத்துக் கொள்ளலாமா? இந்நிலை எமக்கு நீங்கள் செய்யும் மாபெரும் துரோகம் என எடுத்துக்கொள்வது மிகச் சரியானதே.

தமிழினத்துக்கும் தமிழ்த் தேசியத்துக்கும் துரோகம் செய்துகொண்டு தமிழ்த் தேசியக் கட்சிகளுக்குள் இருக்க வேண்டாம். அது எமது தமிழின இருப்பைச் சிதைக்கும். நீங்கள் எடுக்கின்ற முடிவுகளை அறிவுசார் பெரியோர்கள், சட்ட வல்லுநர்களிடம் ஆலோசனை கேட்கத் தவறாதீர்கள். தமிழ்த் தலைமைகளின் சரியான ஏற்பாடும் ஒற்றுமையும்தான் எமக்கான அரசியல் தீர்வை ஏற்படுத்தும். அதனைத்தான் சர்வதேசமும் கவனிக்கும்.

மக்கள் உங்களைக் கவனித்துக் கொண்டிருக்கின்றார்கள். நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் தமிழ்த் தேசிய பாதையில், இன விடுதலைப் பாதையில் செல்லட்டும். இதுவே மக்களின் எதிர்பார்ப்பாகும்." – என்றார்.



# சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிப்பால் சேவை வழங்குவதில் விருந்தகங்களில் நெருக்கடி

இலங்கையில் உள்ள நட்சத்திர விருந்தகங்களில் பணியாளர்களுக்கு வெற்றிடம் ஏற்பட்டுள்ளதால் சுற்றுலாப் பயணிகளுக்கு முறையான உணவு மற்றும் சேவைகளை வழங்குவதில் விருந்தக நிர்வாகங்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முகாமைத்துவ சேவை தொடக்கம் சமையல் அறை வரை அனைத்து திணைக்களங்களிலும் பணியாளர் வெற்றிடங்கள் உள்ளன.

தகுதியான பணியாளர்கள் விண்ணப்பிக்காத காரணத்தினால் இந்தப் பணியிடங்களை நிரப்ப முடியவில்லை எனவும் சம்பந்தப்பட்ட விருந்தக நிர்வாகங்கள் இலங்கை முதலீட்டுச் சபைக்கு அறிவித்துள்ளன.

நட்சத்திர விருந்தக பணியாளர் தரத்திற்கு பயிற்சி பெற்ற பலர் வெளிநாட்டு விருந்தகங்களில் தொழில்வாய்ப்பை பெற்று வெளியேறியதாலும், விருந்தக பயிற்சி பெற்ற பலர் வெளிநாட்டு விடுதிகள் மற்றும் விருந்தகங்களில் தொழில் தேடுவதாலும் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு தீர்வாக, விருந்தக சேவையில் பயிற்சி பெற்ற இளைஞர்களை விரைவில் நட்சத்திர விருந்தகங்களில் இணைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.



# விமான நிலைய பணியாளர்கள் முன்னெடுத்த தொழிற்சங்க போராட்டம் இடைநிறுத்தம்

கட்டுநாயக்க விமான நிலைய பணியாளர்களால், இன்று அதிகாலை 4.30 முதல் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கை, சுமார் இரண்டரை மணித்தியாலங்களின் பின்னர் இடைநிறுத்தப்பட்டுள்ளது

கலந்துரையாடலுக்காக உயர் அதிகாரிகளிடம் இருந்து வந்த அழைப்பிற்கு பின்னர் அவர்கள் தொழிற்சங்க நடவடிக்கையை இடைநிறுத்தியுள்ளனர்.

ஸ்ரீலங்கா விமான சேவை நிறுவனத்தில் நிலவும் வினைத்திறன் அற்ற செயற்பாடுகளுக்கு உடனடி தீர்வை கோரி விமான நிலைய பணியாளர்கள் பணிபுறகணிப்பில் ஈடுபட்டனர். எனினும், விமான நிலைய பணியாளர்களின் தொழிற்சங்க நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு, அது இடைநிறுத்தப்பட்ட இரண்டரை மணித்தியாலங்களில், 4 விமானங்கள் தாமதமாகியுள்ளன என விமான நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## என்ன செய்யப்போகிறது நாடு?

மிக மோசமான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் துவண்டு மெல்ல மேலெழுந்து வரும் இலங்கையின் நிலைமை தொடர்பில் முன்னாள் மத்திய வங்கி ஆளுநரும் பிரபல பொருளியலாளருமான இந்திரஜித் குமாரசுவாமி அண்மையில் சுட்டிக் காட்டிய ஒரு விடயம் மீண்டும் கவனிக்கப்பட வேண்டியதாக இருக்கின்றது.

பொருளாதார மீட்சிக்காக இதுவரை மேற்கொள்ளப்பட்டவை சரியானவை தான். விடயம் ஒழுங்கான தளத்தில் முன்னேறுகின்றது. ஆனால் தேர்தல்கள் வந்தால்தான் நமது நாட்டின் பொருளாதார ஒழுக்கம் - நடைமுறை - சீர்குலைந்து விடுகின்றது. இம்முறை அப்படி நேர்ந்தால் நாடு பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீளவே முடியாது.

- இந்தச் சாரப்பட இந்திரஜித் குமாரசுவாமி அண்மையில் கருத்துக் கூறியிருந்தார்.

''ஒவ்வொரு முறையும் தேர்தல்கள் நடக்கும் போதும் இலங்கையின் பொருளாதாரக் கொள்கைகள் ஒழுக்கம் அற்றவையாக மாறிவிடுகின்றன. தற்போதைய சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்திற்கு முன்பு அதே நாணய நிதியத்தின் 16 திட்டங்களை இலங்கை கொண்டிருந்தது. இவற்றில் பலவற்றில் இப்போதைய போலவே ஆரம்பத்தில் நிலைப்படுத்தலில் முன்னேற்றம் கண்டோம். ஆனால் தேர்தல்கள் நெருங்கும்போது அதுவரை ஏற்பட்ட முன்னேற்றம் தலைகீழாக மாறிவிட்டமையே நமது அனுபவப் பாடமாக இருக்கின்றது'' - என்று அப்போது விவரித்து இருந்தார் அவர்.

மீண்டும் தேர்தல்கள் வருகின்றன. நாம் திரும்பவும் அதே போல நடந்து கொள்ளக் கூடாது. நமது கொள்கைச் சறுக்கல் மூலம் நாம் இதுவரைப் பெற்ற வெற்றிகளை இழந்து விடக்கூடாது என்றும் இந்திரஜித் குமாரசுவாமி கூறியிருக்கிறார்.

இதை ஒட்டிய கருத்து ஒன்றை ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கை நாட்டுக்கான பணிப்பாளர் தகஃபூமி கடோனாவும் கூறி இருக்கின்றார்.

விரைவில் தேர்தல் நடந்தாலும் சர்வதேச நாணய நிதியத்தின் வழிகாட்டலுடனான பொருளாதாரக் கொள்கைச் சீர்திருத்தங்களை இலங்கை மாற்றாமல் - கைவிடாமல் - தொடர்ந்து கடைபிடிக்கும் எனத் தாம் நம்புகின்றார் என்று ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் கூறியிருக்கின்றார்.

தேர்தல்கள் வரும்போது வாக்குகளைச் சுருட்டுவதற்காக நாட்டின் பொருளாதார கள யதார்த்தங்களைப் பற்றிச் சிந்திக்காமல் மானியங்களை - நன்கொடைகளை - இலவசங்களை - வாரி வழங்கும் விதத்தில் நடைமுறைச் சாத்தியமற்ற வாக்குறுதிகளை அரசியல்வாதிகள் அள்ளி வீசுகின்றனர்.

நாட்டின் பொருளாதார ஸ்திரத்துக்காக பொதுத்தரப்புகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய வரிகளை, மக்களுக்கான வெகுமானமாக விட்டுக் கொடுத்து நாட்டின் வருமானத்தை மண்ணாக்குகின்றனர்.

வாக்கு வங்கி அரசியலுக்காகப் பொருளாதாரத்தைப் பற்றிச் சிந்திக்காமல் இப்படி மோசமாக முன்னெடுக்கப்பட்ட அரசியல் நடவடிக்கைகளினாலேயே கடந்த காலத்தில் நாட்டின் பொருளாதாரம் அதல பாதாளத்துக்குள் விழுந்தது என்பது வெளிப்படையானது.

அந்தத் தவறை அரசியல் தலைவர்கள் மீண்டும் செய்ய முற்படக்கூடாது என்று தேர்தல் அரசியலுக்கான சூழல் கட்டவிழும் இந்தச் சந்தர்ப்பத்தில் விசேடமாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இப்போதைய தேர்தல்களில் ஆட்சி மாற்றங்களும், ஆட்சியாளர் மாற்றங்களும் நேர்ந்தால் நாட்டின் பொருளாதாரக் கொள்கைப் போக்குகள், அணுகுமுறைகளிலும் மாற்றம் நேரலாம் என்று அத்தரப்புகள் அச்சம் தெரிவிக்கின்றன.

பொருளாதாரச் சீர்திருத்தங்கள் தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் முன்னெடுத்து வழிநடத்திவரும் நிலைப்பாடுகளில் மாற்றம் ஏற்படுத்தும் விதத்திலான தீர்மானங்கள் தேர்தல் முடிவுகளினால் ஏற்படுமானால், நாடு மீண்டும் மோசமான நெருக்குவாரங்களை எதிர்கொள்ளும் சூழல் உருவாவது தவிர்க்க முடியாதது எனப் பொருளாதார நிபுணர்கள் நேரத்துடனேயே எச்சரிக்கை அலாரம் எழுப்புகின்றார்கள்.

''அப்படியான தலைகீழ் மாற்றங்கள் நடந்தால் எங்களின் ஆதரவு தொடரும் என்பதை உறுதிப்படுத்த முடியாது'' - என ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் நேரத்துடனேயே இலங்கையில் அரசியல் தரப்புகளுக்கு எச்சரிக்கையாகத் தெரிவித்து விட்டார்.

இலங்கை என்ன செய்யப் போகின்றது? தேர்தல் முடிவுகளைப் பொறுத்தது அது.





# பற்றிமா கல்லூரியில் கால்கோள் விழா

(வி.ரி. சகாதேவராஜா)

கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியில் தரம் ஒன்று மாணவர்களை உள்ளீர்க்கும் கால்கோள் விழா கல்லூரி அதிபர் அருட்சகோதரர் ச.இ.றெஜினோல்ட் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில், பிரதம அதிதியாக கல்முனை வலயக்கல்விப் பணிமனையின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம். எச்.எம். ஜாபீர் கலந்து சிறப்பித்தார்.

இதன்போது, மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு உள்ளிட்ட பல நிகழ்வுகள் நடைபெற்றன.

அத்துடன், ஓய்வு பெறும் கல்முனை தமிழ் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சண்முகம் சரவணமுத்து பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.





















# மாணவர்களுக்கு இலவச சீருடை; புத்தகங்கள் வழங்கிவைக்கும் நிகழ்வு

(எஸ்.அஷ்ரப்கான்)

கல்முனை வலயத்திற்குட்பட்ட நிந்தவூர் மற்றும் காரைதீவு கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு இலவச சீருடையும், இலவசப் புத்தகங்களும் வழங்கிவைக்கும் நிகழ்வு நடைபெற்றது.

நிந்தவூர் மஸ்ஹர் பெண்கள் பாடசாலை கலாச்சார மண்டபத்தில் பாடசாலை அதிபர் எம்.டீ.நௌபல் அலி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், நிந்தவூர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கான சீருடை மற்றும் புத்தகங்களையும் வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில், கல்முனை வலயக் கல்விப்பணிப்பாளர் எம்.எஸ்.சஹ்துல் நஜீம் மற்றும் உதவி கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம்.றியாஸா, கோட்டக் கல்விப் பணிப்பாளர் யூ.எல்.எம் சஜித் , இணைப்புச் செயலாளர் பீ.எம்.எம்.ஜஃபர் மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள் பலரும் கலந்து கொண்டனர்.நிந்தவூர் கோட்டம் மற்றும் காரைதீவு தமிழ் கோட்டங்களைச் சேர்ந்த 41 பாட சாலை மாணவர்களுக்கு மேற்படி சீருடை மற்றும் புத்தகங்கள் வழங்கிவைக்கப்பட்டன.








# மட்டக்களப்பு ஜீவனானந்தம் நற்பணிமன்றத்தால் பாடசாலை கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு

(பழுவூரான்)

மட்டக்களப்பு, ஜீவனானந்தம் நற்பணிமன்றத்தால் மட்டக்களப்பில் தெரிவு செய்யப்பட்ட சில பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று நொச்சிமுனை கிராம அலுவலகக் கட்டத்தொகுதியில் இடம்பெற்றது.

நற்பணிமன்றத்தின் தலைவர். திருமதி ச.குணசேகரம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கல்லடி வேலூர் ஸ்ரீசக்தி வித்தியாலயம், மஞ்சந்தொடுவாய் பாரதி வித்தியாலயம், சிவானந்தா தேசிய பாடசாலை, விவேகானந்தா மகளிர் கல்லூரி, கல்லடி விநாயகர் வித்தியாயம், ஜோசப் வாஸ் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்கும் 52 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

இதன்போது ஜீவானந்தம் நற்பணிமன்ற உறுப்பினர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.







# கண்டி கோதமி பெண்கள் கல்லூரியில் மாணவிகளை ஊக்கமளிக்கும் நிகழ்ச்சி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கண்டி கோதமி பெண்கள் கல்லூரியில் மாணவிகளை ஊக்கமளிக்கும் நிகழ்ச்சி இடம்பெற்றுள்ளது.

மாணவிகளை க.பொ.த. உயர்தரம் மற்றும் க.பொ.த. சாதாரண தரம் போன்ற பரீட்சைகளுக்கு தயார் படுத்தல், நினைவாற்றலை வளர்த்தல், தலைமைத்துப் பண்புகளை மேலும் வளர்க்கும் நிகழ்வாகவும் இது அமைந்திருந்தது.

கல்லூரி அதிபர் ரசீகா தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் வளவாளராக லெனின் லக்மால் பிரேமரெட்ன கலந்து கொண்டார்.









# புலனுறுப்புகளால் உலக சாதனை; சாய்ந்தமருது பர்ஷானுக்கு கௌரவம்!

**(பாறுக் ஷிஹான்)**

புலனுறுப்புகளால் மெய்சிலிர்க்கும் சாகசம் புரிந்து சர்வதேச சோழன் உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடித்த இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருதை சேர்ந்த எம். எஸ். எம். பர்ஷான் கிழக்கு நட்புறவு ஒன்றியத்தால் வெள்ளிக் கிழமை (23) இரவு கௌரவிக்கப்பட்டார்.

ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்ததாக உலகின் 26 நாடுகளில் வியாபித்திருக்கும் சர்வதேச சோழன் உலக சாதனை புத்தக நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகள் முன்னி லையில் எம்.எஸ்.எம். பர்ஷானால் புல னுறுப்புகளால் சாதனைகள் புரியப்பட் டன. இந்த நிலையில் உலக சாதனையா ளர்களை பதியும் சோழன் உலக சாதனை புத்தகத்தில் இடம்பெற்றார்.

இவர் கண், காது, மூக்கு , வாய் ஆகிய புலனுறுப்புகளால் அபார சாதனையை மேற்கொண்டு பார்வையாளர்களை வியப்பில் ஆழ்த்தினார்.

காதால் பலூனை ஊதி உடைத்தல், கண்களால் இரும்புக் கம்பியை வளைத்தல், பல்லால் 5.7 கிலோ கிறாம் பாரத்தைச் சங்கிலிகளின் உதவியுடன் உயர்த்துதல், குளிர்பானத்தை முக்குத் துவாரத்தின் ஊடாக அருந்துதல், மூக்குத் துவாரத்தின் ஊடாக வயரைச் செலுத்தி வாய் ஊடாக எடுத்து மின் குமிழை எரியச் செய்தல், பல்லால் தேங்காய் உரித்தல் போன்ற செயற்பாடுகளை 12 நிமிடத்தில் மேற்கொண்டு சர்வதேச சோழன் உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார்.

கிழக்கு நட்புறவு ஒன்றியத்தின் தவிசாளர் பொறியியலாளர் எம்.எம். நசீர், கிழக்கு நட்புறவு ஒன்றியத்தின் பிரதித் தவிசாளர் எம்.யுனைதீன், சாய்ந்தமது பிரதேச முன்னாள் செயலாளர் ஏ.எல்.எ.சலீம், நிர்வாக பணிப்பாளர் தபாலதிபர் யூ.எல்.எம். பைசர் உள்ளிட்ட கிழக்கு நட்புறவு ஒன்றியத்தின் உறுப்பினர்கள் கலந்து கொண்டு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர்.

# உன்னிச்சை, நெடியமடு கிராமங்களுக்குள் ஊடுருவிய யானைகள் பெரும் அட்டகாசம்!

**(வவுணதீவு நிருபர் )**

மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு பிரதேசத்திலுள்ள உன்னிச்சை, நெடியமடு, கற்பானைக்குளம் போன்ற கிராமங்களுக்குள் நேற்று சனிக்கிழமை (24) அதிகாலை சில யானைகள் ஊடுருவி அங்குள்ள இரண்டு வீடுகளை கடும் சேதத்துக்கு உள்ளாக்கியுள்ளன. விவசாயிகளின் தென்னை மரங்களையும் அழித்துள்ளன.

யானை பாதுகாப்பு மின்சார வேலிகள் இருந்தும், அவ்வேலிகளைத் தாண்டி மாலை 5 மணிக்கே கிராமங்களுக்குள் யானைகள் ஊடுருவி தமது பயிர்களையும் வீடுகளையும் தாக்கி சேதப்படுத்தி வருகின்றன என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் வயோதிபப் பெண் ஒருவரையும் விவசாயி ஒருவரையும் நெடியமடு, களிக்குளம் கிராமத்தில் வீதியால் சென்ற போது யானை தாக்கியுள்ளது. தெய்வாதீனமாக சிறு காயங்களுடன் அவர்கள் உயிர் தப்பியுள்ளனர் என்று இப் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இந்த யானை அனர்த்தங்களில் இருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு அரசு ஒரு சரியான நடவடிக்கை எடுக்கவில்லை என்று மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இங்குள்ள காந்திநகர், உன்னிச்சை போன்ற சில கிராமங்களில் உள்ள சிறு காடுகளுக்குள் இரவு பகலாக யானைகள் நிற்கின்றன என்றும் தாம் குழந்தைகளை வைத்துக் கொண்டு பதற்றத்துடன் வாழ்ந்து வருகின்றனர் என்றும் தெரிவித்துள்ளனர்.

இதனை கவனத்தில் எடுத்து, யானை பாதுகாப்பு மின்சார வேலிகளுக்கு உள்ளே இருக்கும் யானைகளையும் வேலிகளுக்கு வெளியே இருக்கும் யானைகளையும் இங்கிருந்து வெளியேற்றி பெரும் காடுகளுக்குள் துரத்தி, பாதுகாப்பை வழங்குமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.





# கைவிடப்பட்ட குடியிருப்புத் திட்டம்; மீண்டும் ஆரம்பிக்கக் கோரும் மக்கள்!

நல்லாட்சி அரசின் காலத்தில் 2017 ஆம் ஆண்டில் மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள புரவுன்ஷீக் தோட்ட ராணி பிரிவில் குடியிருப்புக்கான வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

அது பின்னர் கைவிடப்பட்டுள்ள நிலையில், தற்போதைய அமைச்சர் ஜீவன் தொண்டமான் முன்வந்து இந்த வீடமைப்பு திட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

40 தற்காலிக குடியிருப்புகளில் வசித்து வரும் அந்தத் தோட்டத் தொழிலாளர்களுக்குப் புதிய குடியிருப்புகள் அமைக்க அப்போதைய புதிய கிராமங்கள் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் பழனி திகாம்பரத்தின் பணிப்புரைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

குடியிருப்பு திட்டம் ஆரம்பிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வந்த நிலையில் அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டன. ஆகையால் இந்த வீட்டு திட்டம் கைவிடப்பட்டது.

இதனால் பல கோடி ரூபா வீணடிக்கப்பட்டதுடன் 40 குடும்பங்களைச் சேர்ந்த ராணி பிரிவில் உள்ள தொழிலாளர்கள் கடந்த ஏழு வருடங்களாக தற்காலிக குடியிருப்புகளிலேயே வசித்து வருகின்றனர்.

இந்தத் தற்காலிக குடியிருப்புகளில் வசித்துவரும் தொழிலாளர்களின் பிள்ளைகள் மற்றும் பாடசாலை மாணவர்கள், கர்ப்பிணிப் பெண்கள், நோயாளிகள் சொல்லொணாத் துயரடைந்து வருகின்றனர்.

எனவே இந்த விடயத்தில் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கேட்டுள்ளனர்.



# விருட்சம் உதவும் அமைப்பால் கற்றல் உபகரணங்கள் வழங்கல்!

(பழுவூரான்)

விருட்சம் உதவும் உள்ளங்கள் அமைப்பின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம், இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் 1000 மாணவர்களுக்கு "உயர்த்தும் கரங்கள்" வேலைத் திட்டத்தின் கீழ் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் இடம்பெற்று வருகின்றது.

அதன் அடிப்படையில் கிழக்கு மாகாணத்தில் 300 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கவுள்ள நிலையில், அதன் முதற் கட்டமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 100 மாணவர்களுக்கான புத்தகப் பைகளும், அப்பியாசக் கொப்பிகளும் மட்டக்களப்பு விபுலானந்த வித்தியாலயத்தில் வழங்கப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில் அம்பாறை சித்தானைக்குட்டி ஆலயம், காரைதீவு மற்றும் தமண மகா வித்தியாலயம் ஆகியவற்றில் 125 மாணவர்களுக்கும், திருகோணமலையில் கிளிவெட்டி மகா வித்தியாலயத்தில் 75 மாணவர்களுக்குமாக மொத்தம் 300 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.








# சுற்றாடல் முன்னோடிச் செயற்றிட்டத்தில் கழுகமுவ மத்திய கல்லூரிக்குப் பதக்கம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மத்திய மாகாண தமிழ் மொழி மூல பாடசாலைகளில் முதன் முறையாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சூழல் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட சுற்றாடல் முன்னோடி இணைப்பாட விதான செயற்றிட்டத்தில் ஜனாதிபதி பதக்கத்தை முதல் முறையாக வென்று கெலிஓய, கழுகமுவ மத்திய கல்லூரி வரலாற்று சாதனை படைத்துள்ளது.

கம்பளை கல்வி வலயத்துக்கு உட்பட்ட கெலிஓய, கழுகமுவ பிரதேசத்திலுள்ள பிரபல பாடசாலையான கழுகமுவ மத்திய கல்லூரி மாணவிகளான ஏ.எம்.மரியம் லீனா ,எம்.என் .நூருல் ஹிக்மா, எம்.ஏ.எப். பர்ஹா, பீ.எப். சஹறாமா, எம்.எஸ்.சல்மா, எம்.எஸ்.எப். சஹானா ஆகியோரை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் எம்.ஆர்.எம்.அனஸ் தலைமையில் இடம்பெற்றது.




இந்த நிகழ்வில் கம்பளை தேர்தல் தொகுதியின் ஐக்கிய மக்கள் சக்தியின் உப தலைவர் பஸ்லான் பாறூக் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பஸ்லான் பாறூக் பௌண்டேசன் ஊடாக பரிசில்களை வழங்கினார்.

இந்த நிகழ்வில் ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி குழு உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# வாழ்வாதார உதவிகள் வழங்கல்!



(அஸ்ஹர் இப்றாஹிம்)

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கில் ஐந்து பயனாளிகளுக்கு வியாபாரத் தள்ளு வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் வேண்டுகோளின் பேரில் குவைத் நாட்டின் நிதி பங்களிப்பில் அல்- ஹிமா நிறுவனத்தின் அனுசரணையில் தலா ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நான்கு சக்கர வியாபாரத் தள்ளு வண்டிகள் தெரிவு செய்யப்பட்ட ஐந்து பயனாளிகளுக்கு அண்மையில் வழங்கப்பட்டன.

வாழவைத்தகுளம் அல்-பதாலாஹ் கல்வி வளாகத்தில் வைத்து இராஜாங்க அமைச்சரால் இவை வழங்கப்பட்டன.

# பற்களின் நிறம் மாறுவதற்கு காரணம் என்ன?

மற்றவர்களைப் பார்த்து புன்னகை புரியும் போது பற்கள் பளிச்சென்று இருக்க வேண்டும் என்று விரும்பாதவர்கள் உண்டா? முகத்தை பேசியல், பிளீச்சிங் என்று செயற்கை முறையில் அழகூட்டுவதைப் போல இப்போது பற்கள் கொஞ்சமாக மஞ்சள் நிறத்துக்கு மாறிவிட்டால் கூட பலரும் அதற்கு அழகூட்ட பல மருத்துவமனை களிலும், அழகு நிலையங்களிலும் வரிசையில் காத்திருக்கிறார்கள்.

**பல்லுக்கு நிறம் தருவது எது?**

ஒவ்வொரு பல்லிலும் வெளியில் தெரிகிற பகுதிக்கு 'எனாமல்' என்று பெயர். இதற்கு அடுத்த பகுதியாக இருப்பது 'டென்டின்'. ஒருவருக்கு டென்டின் எந்த நிறத்தில் அமைகிறதோ அந்த நிறம்தான் அவருடைய பற்களின் நிறம், பொதுவாக, பற்கள் எல்லோருக்கும் காபியில் கலக்கப்படும் சர்க்கரை மாதிரி வெள்ளையாக இருக்காது முத்துப்போன்ற வெண்மை, வெளிர் மஞ்சள், சந்தன நிறம் என்று பற்களுக்கு இயற்கையிலேயே பல நிறங்கள் உண்டு.

பல் முளைக்கும்போது வெள்ளை நிறத்தில் இருக்கின்ற பற்கள், வயது ஆக ஆக அந்தப் பொலிவு குறைந்து கொஞ்சம் மஞ்சள் நிறத்துக்கு மாறும். எனாமல் எனும் வெளிபூச்சு தேய்ந்து டென்டின் எனும் உள்பகுதி வெளியில் தெரியத் தொடங்குவதே முதுமையில் ஏற்படும் பல்லின் நிறமாற்றத்துக்கு அடிப்படைக் காரணமாகும். ஆனால், பலருக்கும் இளமையிலேயே பற்களின் நிறம் மாறிவிடுகிறதே. இதுஏன்? அதற்கான காரணங்களை என்ன?.

**பற்கள் நிறமிழுப்பது ஏன்?**

பற்களைச் சுத்தமாகப் பராமரிக்கத் தவறுவது பற்களின் நிறமாற்றத்துக்கு முக்கியக் காரணம். எனாமலில் பற்கரை படிவதால் பல்லின் நிறம் மாறுகிறது. புகைப்பழக்கம். வெற்றிலை, பாக்கு, புகையிலை போடுவது, பான்மசாலா குட்காவைப் பயன்படுத்துவது போன்ற பழக்கங்கள் உள்ளவர் களுக்கு பற்களின் நிறம் காவி நிறத்துக்கு மாறும். காரணம் புகையிலையிலுள்ள நிகோடிட் ரசாயனத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக டென்டின் உறிஞ்சிக்கொண்டே இருக்கும். நாளடைவில் அதன் இயல்பான நிறத்தை இழந்துவிடும்.

இனிப்புப் பண்டங்களை அதிகம் சாப்பிடுவதும், குளிர்பானங்களை அடிக்கடி அருந்துவதும் பற்களின் நிறம் மாறுவதற்குத் துணைசெய்யும். கறுப்புச் சாக்லேட்டை அதிகமாகச் சாப்பிட்டால், காபி, கறுப்புத் தேநீர், சிவப்பு ஒயின் ஆகியவற்றை அதிகளவில் குடித்தால் விரைவிலேயே பற்களின் நிறம் மாறிவிடும். காபியிலும் தேநீரிலும் உள்ள டானின் ரசாயனம், ஒயினில் உள்ள 'பாலிபீனால்' எனும் ரசாயனம் பல்லில் நிறமாற்றத்தை ஏற்படுத்துகின்றன.

சோயா சோஸ், விநிகர் போன்றவற்றை அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்தும்போதும் பற்களின் நிறம் மாறலாம். பல்லில் சொத்தை ஏற்படுவது விபத்தில் அடிபடுவது போன்ற காரணங்க ளால் பற்கள் கறுப்பு நிறத்துக்கு மாறிவிடும்.



தொகுப்பு: பைஷல் இஸ்மாயில்

நாம் குடிக்கும் தண்ணீரிலும், பாலிலும் புளோரைட் அளவு அதிகமாக இருக்கு மானால் ஹுநவெயட குடரழசழளளை எனும் பிரச்சினை ஏற்படும். அப்போது பற்கள் அடர் மஞ்சள், காவிநிறம் என்று பல்வேறு நிறங்களில் காணப்படும். எனாமலில் மாநிற அல்லது வெள்ளை நிறக்கோடுகள் பட்டை போட்டதுபோல் தெரியும்.

கருவுற்ற பெண்கள் மருத்துவரின் ஆலோசனை இல்லாமல் தாங்களாகவே டெட்ராசைக்கிளின் போன்ற ஆன்ட்டிபயாட்டிக் மாத்திரைகளைச் சாப்பிடும் போது அவற்றின் பக்கவிளைவாக அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைக்குப் பற்களில் நிறமாற்றம் காணப்படும். இதுபோல இரத்தச்சோகை நோய்க்கு இரும்புச்சத்து மாத்திரை மற்றும் டானிக்குகளைத் தொடர்ந்து நீண்ட நாள்களுக்கு எடுக்கும் போதும் பற்களின் நிறம் கறுப்பாக மாறும். ஊாசழஅழபநளைஉ பக்டீரியாவாலும் பற்கள் நிறமிழக்கின்றன. இவ்வகை பாக்டீரியாக்கள் வளர்வதற்கு மன அழுத்தம் ஒரு முக்கிய காரணியாக அறியப்பட்டுள்ளது.



**என்ன சிகிச்சை?**

புகையிலை காரணமாகக் கறை படிந்த பற்கள் உள்ளவர்கள் டென்டல் புளூரோசிஸ் பிரச்சினை உள்ளவர்கள், மாத்திரை மருந்துகளால் பற்களின் நிறம் மாறியவர்கள் ஆகியோருக்கு பற்களின் மஞ்சள் நிறத்தை மாற்றி வெள்ளை நிறத்துக்குக் கொண்டுவருவதற்கு டூத் ஒயிட்டனிங் (வுழழவா றூவைநநைபெ) எனும் சிகிச்சைமுறை இப்போது செய்யப்படுகிறது.

இதை ஆறு மாதங்களுக்கு ஒருமுறை மீண்டும் மீண்டும் செய்துகொள்ள வேண்டும். அப்போதுதான் பற்களின் நிறம் வெள்ளை நிறத்தில் நிலைத்து நிற்கும். அப்படிச் செய்யும்போது ஒரு சிக்கல் உண்டாவதைத் தவிர்க்க முடியாது. அதாவது, அந்தப் பற்கள் விரைவிலேயே சிதைந்துவிடும். இப்பொழுது டென்டல் வெனீர் (Dental veneers)

தொடர்ச்சி ▼

# பற்களின் நிறம் மாறுவதற்கு காரணம் என்ன?

**தொடர்ச்சி ▲**

சிகிச்சை பயன்பாட்டில் உள்ளது. இது பற்களைச் சிதைக்காமல் இயல்பான நிறத்தைத் தருகிறது.

**எங்கு செய்வது? யாருக்குச் செய்வது?**

பற்களுக்கு அழகூட்டச் செய்யப்படும் இந்தச் சிகிச்சையை பலரும் அழகு நிலையங்களில் செய்துகொள்கிறார்கள். இன்னும் சிலர் இணையத்தில் படித்து தாங்களாகவே பற்களை அழகுபடுத்திக்கொள்கிறார்கள். இவை இரண்டுமே தவறானதாகும்.

இது பல ரசாயனங்களைப் பயன்படுத்திச் செயற்கை முறையில் செய்யப்படும் சிகிச்சை என்பதால், கடுமையான ஒவ்வாமை ஏற்பட்டு உயிருக்கு ஆபத்து நெருங்குவதற்கு அதிக வாய்ப்புண்டு. ஆகவே, தகுதி பெற்ற பல் மருத்துவரால் மட்டுமே இந்தச் சிகிச்சையைச் செய்ய முடியும். அப்படியும் இந்தப் பிரச்சினை உள்ள எல்லோருக்கும் இதைச் செய்ய முடியாது. யாருக்கு இதைச் செய்ய வேண்டும் என்பதை பல் மருத்துவர்தான் முடிவு செய்ய வேண்டும். குறிப்பாக, கர்ப்பிணிகள் இதைச் செய்துகொள்ளக் கூடாது.

**தடுக்க வழி உண்டா?**

இந்தச் சிகிச்சைக்குப் பதிலாக ஆண்டுக்கு ஒருமுறை 'ஸ்கேலிங்' என்ற முறையில் பற்களைச் சுத்தப்படுத்திக் கொள்ளலாம். இதன் மூலம் பல்லில் காரை படிதல், நிறமிழத்தல் போன்ற பிரச்சினைகள் தவிர்க்கப்படும். இதற்கு ஒவ்வாமை ஏற்பட வழியில்லை. பற்களுக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படுவதில்லை. பற்கள் எளிதாக இயல்பான நிறத்துக்கு மாறிவிடும்.

டென்டல் புளுரோசிஸ் பிரச்சினை உள்ளவர்கள் பல் மருத்துவரின் ஆலோசனைப்படி புளுரைடு பற்பசைகளைப் பயன்படுத்த வேண்டும். குடிக்கும் நீரில் புளுரைடு தாது அதிகமாக இருந்தால் அந்த நீரை அப்படியே குடிக்கக்கூடாது. ஒரு லீற்றர் குடிநீரில் அலுமினியம் சல்பேட் 12.8 கிராம், கல்சியம் ஒக்சைட் 6.4 கிராம் கலந்து 10 நிமிடங்களுக்கு நன்கு கலக்க வேண்டும். மூன்று மணி நேரம் கழித்து அந்த நீரை மெல்லிய துணியில் வடிகட்டி பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் ஓரளவுக்குப் புளோரைட்டு தாதுவை குடிநீரில் குறைத்துவிடலாம். டென்டல் புளோரோசிஸ் பாதிப்பு வராமலும் பாதுகாத்துக்கொள்ளலாம்.

புகைப்பழக்கம், புகையிலை போடுதல் இந்த இரண்டையும் கைவிடவேண்டும், குளிர் பானங்கள், கோலா பானங்கள் குடிப்பதை அவசியம் தவிர்க்க வேண்டும், பதப்படுத்தப்பட்ட உணவுகளை அடிக்கடி சாப்பிடக்கூடாது, மதுவை முற்றிலும் தவிர்க்க வேண்டும்.

சாக்லேட், இனிப்புக் கலந்து மாப்பொருள் மற்றும் சர்க்கரை கலந்த இனிப்புகளைச் சாப்பிட்ட பிறகு வாயை நன்றாகக் கொப்பளியுங்கள். அல்லது கரட் ஏதாவது ஒரு பழம் சாப்பிடுங்கள். இதன் பலனால் பற்களில் ஒட்டியிருக்கிற சர்க்கரைப் படலம் எளிதாக நீங்கிவிடும். கறை படிவதும் தடுக்கப்படும்.

'பளிச் பற்களுக்கான ஊடக விளம்பரங்களைப் பார்த்துத் தினமும் புதிது புதிதாக பற்பசைகளை வாங்கிப் பயன்படுத்தாதீர்கள். பல பற்பசைகளில் 'பிளீச்சிங் ரசாயனங்களே உள்ளன. இவற்றால் சில நாள்களில் பற்கள் வெண்மையானது போல் தோன்றலாம். ஆனால், நாளடைவில் எனாமல் கரைந்து பற்கள் சேதமடையவே வாய்ப்புகள் அதிகமுள்ளன.

ஒரு நாளைக்கு இரண்டுமுறை பல் துலக்க வேண்டும். மிருதுவான பல்துலக்கியில் பட்டான் அளவுக்கு பற்பசை எடுத்துக்கொண்டு அதிகபட்சம் ஐந்து நிமிடங்களுக்குப் பல் துலக்கினால்போதும். அதிகநேரம் துலக்குவதாலோ, அழுத்தமாகத் துலக்குவதாலோ, அதிக பற்பசை கொண்டு துலக்குவதாலோ பற்கள் வெள்ளை நிறத்துக்கு மாறிவிடாது. ஜெல் பற்பசை மற்றும் பல்வேறு நிறங்களில் உள்ள பற்பசையைப் பயன்படுத்த வேண்டாம்.

வெள்ளை நிறத்தில் இருக்கும் பற்பசையை மட்டுமே பயன்படுத்துங்கள். மருத்துவரின் பரிந்துரை இல்லாமல் நீங்களாகவே மருந்து மாத்திரைகளை வாங்கி குடிக்க வேண்டாம்.

**புளோரைட் பற்பசை அவசியமா?**

புளோரைட் தாது இருமுனைக் கத்தி போன்றது. இது உடலில் குறைந்தாலும் குற்றம். அதிகமானாலும் ஆபத்து. இது நீரிலும் இருக்கிறது. நாம் சாப்பிடும் பல உணவுகளிலும் இருக்கிறது. சமச்சீரான உணவைச் சாப்பிடுவோருக்கு அவரவர் தேவைக்கேற்ப உணவிலிருந்தே இது கிடைத்துவிடும்.

ஆகவே, புளோரைட் கலந்த பற்பசை எல்லோருக்கும் தேவையில்லை. ஆனால், இன்றைய ஊடகங்களில் வரும் பற்பசை விளம்பரங்கள் யாவும் எல்லோருக்கும் புளோரைட் பற்பசை அவசியம் என்றுதான் பாடம் நடத்துகின்றன.

புளோரைட் பற்பசையில் 700 பி.பி.எம். அளவுக்கு புளோரைட் உள்ளது. பொதுவாகவே சிறு குழந்தைகள் பற்பசையைப் பயன்படுத்தும்போது சரியான முறையில் வாயைக் கழுவ மாட்டார்கள். இதனால் பற்களில் புளோரைட் தேங்கும். மேலும், பல குழந்தைகள் பற்பசையை விழுங்கிவிடுவார்கள். இதனால் வயிற்றுக்கோளாறுகள் வரும். இந்தப் பழக்கம் நீடித்தால் இவர்களுக்கு நிலைப்பற்கள் முளைக்கும்போது 'டென்டல் புளோரோசிஸ்' பாதிப்பு வந்து பற்கள் நிறமிழக்கலாம்.

குறிப்பிட்ட அனைத்து விடயங்களையும் நாம் கவனத்தில் கொண்டு செயற்பட்டால் பல்லில் ஏற்படும் பாதிப்புகளில் இருந்து தப்பித்துக் கொள்ள முடியும்.



# அன்னமலை ஸ்ரீ சக்தி வித்தியாலயத்தின் முப்பெருவிழா சிறப்பாக நடைபெற்றது

(காரைதீவு சகா)

சம்மாந்துறை வலயத்துக்குட்பட்ட அன்னமலை ஸ்ரீ சக்தி வித்தியாலயத்தின் முப்பெருவிழா அதிபர் பொன். பாரதிதாசன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

தரம் ஒன்றின் வித்யாரம்பம், தரம் ஐந்தின் விடுகை விழா மற்றும் முன் பள்ளி மாணவர்களின் புதுமுக புகு விழாவும் சேர்ந்து முப்பெருவிழாவாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக, இந்த பாடசாலையில் ஆரம்ப கல்வியை கற்று, தற்போது ஆலையடிவேம்பு உதவி பிரதேச செயலாளராக பணியாற்றும் ரத்னம் சுபாகர் கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதியாக. உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜாவும், சிறப்பதிதியாக ஈ.பி.எஸ்.ஐ. இணைப்பாளர் கே. குணரத்ன ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்துடன், ஆலயயங்களின் நிர்வாக பிரதிநிதிகள், சமூக பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பெற்றோர் என் பலரும் கலந்து சிறப்பித்தனார்.

இந்த விழாவில் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை அன்னமலையை சேர்ந்த கொழும்பில் வசிக்கும் தொழிலதிபர் எஸ். காண்டீபன் வழங்கி வைத்தனர்.

மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.











# இந்திய மத்திய அரசு ஒரு ரூபாயை கூட வெள்ள நிவாரணமாக கொடுக்கவில்லை

## முதல்வர் ஸ்டாலின் குற்றச்சாட்டு




"மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி உள்ளிட்ட மாவட்டங்களில் தமிழக அரசு சார்பில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்கு மத்திய அரசு ஒரு ரூபாய்கூட கொடுக்க வில்லை."

– இவ்வாறு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்தார்.

தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் பெரு வெள்ளம் மற்றும் அதி கனமழையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டார்.

இதன்போது நலத்திட்ட உதவிகளை வழங்கி முதல்வர் ஸ்டாலின் உரையாற்றுகையில்,

"தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் பெருவெள்ளத்தால் உயிரிழந்த 58 பேருக்கு, 5 லட்சம் ரூபாய் வீதம் வழங்கப்பட்டிருக்கிறது. வெள்ளத்தால் உயிரிழந்த ஆடு, மாடு, கோழிகளின் உரிமையாளர்களுக்கு, 34 கோடியே 74 லட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டிருக்கிறது. தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் அதிகமாக பாதிப்படைந்தவர்களுக்கு 6 ஆயிரம் ரூபாய் வீதம் 382 கோடியே 25 லட்சம் ரூபாய் வழங்கப் பட்டிருக்கிறது. அதேபோல, மிதமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆயிரம் ரூபாய் வீதம் 35 கோடியே 92 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது.

இரண்டு மாவட்டங்களிலும் பாதிப்படைந்த வீடுகளுக்கு 10 ஆயிரம் ரூபாய் வீதம், மொத்தம் 9 கோடியே 35 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. இது மட்டுமல்லாமல், வீடுகளை திருத்துதல், பயிர் சேத நிவாரணம், சிறு வணிகர்களுக்கு சிறப்பு கடன் திட்டம், தொழில் நிறுவனங்களுக்கு கடனுதவித் திட்டம்,

முழுமையாக சேதமடைந்த வீடுகள் புதிதாக கட்டுவதற்கு 4 லட்சம் ரூபாயும், பகுதியாக சேதமடைந்த வீடுகளில் புனரமைப்பு செய்வதற்கு 2 லட்சம் ரூபாய் வரையிலும், நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இதன்மூலம், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில், 4 ஆயிரத்து 624 குடும்பங்கள் பயனடைவார்கள். கால்நடைகளை இழந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு, புதிய கால்நடைகள் வாங்குவதற்கு ஒன்றரை லட்சம் ரூபாய் வரைக்கும், தனிநபர் கடன் உதவி வழங்கவும் ஆணையிட்டிருக்கிறோம். தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் பெருவெள்ளத்தால் சேதமடைந்த சாலைகளை மறுசீரமைப்பு செய்ய 343 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் நடந்துகொண்டு வருகிறது.

இந்த மழை வெள்ளத்தால் குடும்ப அட்டைகள் உள்ளிட்ட அரசு ஆவணங்களை இழந்தவர்கள் அனைவருக்கும் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு அவையும் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு மாவட்டத்திலும், 670 குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு 18 கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்பட்டிருக்கிறது.

இதனால், இந்த மாவட்டங்களைச் சார்ந்த உப்பு உற்பத்தியாளர்கள், தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் உள்ளிட்ட பல்வேறு சிறுதொழில் செய்வோர் பயனடைந்து இருக்கிறார்கள். இவை எல்லாவற்றையும் மத்திய அரசு ஒரு ரூபாய் கூட கொடுக்கவில்லை. அதுதான் முக்கியம். மத்திய அரசு ஒரு ரூபாய்கூட கொடுக்காதபோதும், இது யார் கொடுத்தது என்றால், இந்த ஸ்டாலின் உங்களுக்காக கொடுத்தது. இந்த அரசு உங்களுக்காக கொடுத்தது."– என்றார்.

# தமிழக மீனவர்களை விடுதலை செய்யக் கோரி தங்கச்சிமடத்தில் உண்ணாவிரதப் போராட்டம்!



இலங்கைச் சிறையில் உள்ள மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி தங்கச்சிமடம் பஸ் நிலையத்தில் இந்திய மீனவர்கள் சாகும்வரை உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இந்தப் போராட்டமானது, நேற்றுக் காலை ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுக்கப்படுகின்றது.

இராமேஸ்வரம் மீன்பிடி துறை முகத்தில் இருந்து கடற்றொழிலுக்கு சென்ற நிலையில் இலங்கைக் கடற்படையால் சிறை பிடிக்கப்பட்ட 5 இராமேஸ்வரம் கடற்றொழிலாளர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி இராமேஸ்வரம் மீனவர்கள் மற்றும் சிறையில் உள்ள மீனவர்களின் உறவினர்கள் என சுமார் நூற்றுக்கும் மேற்பட்டோர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

சிறையில் உள்ள மீனவர்களை விடுதலை செய்யும் வரை தொடர் வேலை நிறுத்த போராட்டம் அறிவித்துப் பத்து நாள்கள் கடந்த நிலையிலும் இராமேஸ்வரம் மீனவர்கள் தொடர்ந்தும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடற்றொழிலாளர்களின் இந்த போராட்டம் காரணமாக தங்கச்சி மடத்தில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மீனவர்களின் கோரிக்கை நிறைவேறும்வரை இரவு பகலாகத் தொடர்ந்து உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட போகின்றனர் என்று கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் ஜேசுராஜா தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தான் பகுதிக்குள் ஈரான் திடீர்த் தாக்குதல்!



பாகிஸ்தான் பகுதிக்குள் மீண்டும் ஈரான் நடத்திய தாக்குதலில் ஜெய்ஷ் அல்-அட்ல் இயக்கத்தின் தளபதி இஸ்மாயில் ஷாபக்ஷ் கொல்லப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஜெய்ஷ் அல்-அட்ல் இயக்கம் அடிக்கடி ஈரான் மீது தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்த நிலையில் பாகிஸ்தானின் பலுசிஸ்தான் பகுதியில் செயல்படும் ஜெய்ஷ் அல்-அட்ல் இயக்கத்தினரைக் குறிவைத்து ஈரான் இராணுவம் கடந்த மாதம் ஏவுகணைகள் வீசித் தாக்குதல் நடத்தியுள்ளது. இதற்கு பதிலடியாக ஈரானின் தென்கிழக்கு பகுதியில் பாகிஸ்தானுக்கு எதிரான பிரிவினைவாத அமைப்புகள் மீது பாகிஸ்தான் இராணுவம் தாக்குதல் நடத்தியுள்ளது. இதனால் இரு நாடுகள் இடையே பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது. பின்னர் பேச்சு நடத்தப்பட்டதில் அமைதி திரும்பியிருந்தது.

இந்த நிலையில், ஈரான் இராணுவம் மீண்டும் பாகிஸ்தானுக்குள் தாக்குதல் நடத்தியுள்ளது. இதில் ஜெய்ஷ் அல்-அட்ல் இயக்கத்தின் தளபதி இஸ்மாயில் ஷாபக்ஷ் மற்றும் சிலர் கொல்லப்பட்டனர் என்று ஈரான் அரசு ஊடக தகவலை மேற்கோள் காட்டி ஈரான் இன்டர்நேஷனல் செய்தி வெளியிட்டுள்ளது.

இதனால் ஈரான் மற்றும் பாகிஸ்தான் இடையே மீண்டும் பற்றம் ஏற்பட்டுள்ளது. ஈரானின் தென்கிழக்கு மாகாணத்தில் தீவிரமாக செயற்பட்டு வரும் ஜெய்ஷ் அல்-அட்ல் இயக்கத்தைப் பயங்கரவாதக் குழுவாக ஈரான் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஹவுதிகளின் ஆயுத கிடங்குகள் அழிப்பு: செங்கடல் தாக்குதலுக்கு அமெரிக்கா பதிலடி



செங்கடல் தாக்குதலுக்கு பதிலடியாக ஏமனில் செயல்பட்டுவரும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியுள்ளது.

ஏடன் வளைகுடாவில் அமெரிக்கக் கொடியுடன் சென்ற எண்ணெய்க் கப்பலை குறிவைத்தோம் என ஹவுத்தி குழுவின் இராணுவ செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், ஏமனில் உள்ள ஹவுதி கிளர்ச்சியாளர்களை குறிவைத்து அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து மீண்டும் வான்வழி தாக்குதல் நடத்தியுள்ளன. ஏமனில் 18 இற்கும் மேற்பட்ட பகுதிகளில் ஹவுதி கிளர்ச்சியாளர்களின் ஆயுதகிடங்குகள் உள்ளிட்ட இலக்குகளை குறிவைத்து வான்வழி தாக்கு தல் நடத்தப்பட்டுள்ளது. இந்த தாக்குதலால் மத்திய கிழக்கு பகுதியில் பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது.

# உக்ரைனுக்கு அனைத்து உதவிகளையும் செய்வதற்கு இங்கிலாந்து தயாராக உள்ளது

## பிரதமர் ரிஷி சுனக் தெரிவிப்பு



உக்ரைனுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்ய தமது நாடு தயாராக உள்ளதாக இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மீதான ரஷ்யா தொடங்கிய போர் 2 வருடங்கள் நிறைவடைந்த நிலையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்தம் மற்றும் படைகளை உக்ரைனிலிருந்து திரும்ப பெறுவது குறித்து பல உலக நாடுகள் கடந்த பல மாதங்களாக முன் வைத்த கோரிக்கைகளை ரஷ்ய ஜனாதிபதி புடின் புறக்கணித்து வந்தார்.

இதை தொடர்ந்து சில தினங்களுக்கு முன் ரஷ்யாவிற்கு எதிராக மேலும் பல பொருளாதார மற்றும் வர்த்தக கட்டுப்பாடுகளை இங்கிலாந்து கொண்டு வந்தது.

பல்வேறு காரணங்களால் அமெரிக்காவிலிருந்து உக்ரைனுக்கு கிடைத்து வந்த பொருளாதார மற்றும் இராணுவ உதவிகள் தொடர்ந்து கிடைப்பதில் சிக்கல் நீடித்து வருகிறது. இந்த நிலையில், இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக், உக்ரைனை தொடர்ந்து ஆதரிப்பதற்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்ய தமது நாடு தயாராக உள்ளதாக தெரிவித்தார்.

மேலும் ரிஷி சுனக், உக்ரைனுக்கு சுமார் 2600 கோடி ரூபா மதிப்பிலான இராணுவ தளவாட உதவிக்காக நிதி ஒதுக்கியுள்ளார்.

இது குறித்து பிரதமர் ரிஷி சுனக் தெரிவிக்கையில்,

"போர் தொடங்கி 2 வருடங்கள் நிறைவடைந்த நிலையில் ரஷ்யாவின் ஆதிக்க மனப்பான்மையை எதிர்க்கும் நிலைப்பாட்டில் இங்கிலாந்து மேலும் உறுதியாக உள்ளது.

என்றுமே சர்வாதிகாரம் வெற்றி பெறுவதில்லை. நாங்கள் இன்றும் உக்ரைன் பக்கமே நிற்கிறோம். தொடர்ந்தும் நிற்போம். இதற்காக எத்தனை நாள்கள், என்னென்ன செய்ய வேண்டுமோ, அனைத்தையும் செய்வோம்" - என்றார்.

பக்கங்கள் 04

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 25/02/2024

## ஆதரவு கோருகிறார் சீனாவில் தூதுவர்



பெய்ஜிங்கின் பட்டுப்பாதைத் திட்டத்தின் கீழ் கனேடிய வர்த்தகங்களும் ஒத்துழைக்க வேண்டும் என ஒட்டாவாவில் உள்ள 02




# மிசிசாகாவில் பயணிகள் பஸ் மீது சூடு! பொலிஸ் விசாரணையை ஆரம்பித்தது

**ஒன்ராரியோ,பெப்.25**
**மிசிசாகாவில் பயணிகள் பஸ் மீது முன்னெடுக்கப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பில் பீல் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.**

நேற்று பெப்ரவரி 24ஆம் திகதி மாலை 3.30 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றதாக பீல் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கறுப்புநிற வாகனம் ஒன்றில் வந்த சந்தேகநபரே இந்த துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளார் என ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தில் பஸ்ஸின் ஜன்னல் கண்ணாடிகள் சேதமடைந்த போதிலும், இந்த சம்பவத்தினால் எவரும் காயமடையவில்லை எனப் பீல் பொலிஸாரின் சமூக ஊடகச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மிசிசாகாவில் சிறையிலிருந்து விடுதலையான நபர் குறித்து பொலிஸார் முன்னெச்சரிக்கை!

## அவதானமாக இருக்கும்படி பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்

ஒன்ராரியோ,பெப்.25

மிசிசாகாவில் சிறைச்சாலையில் இருந்து விடுதலையாகியுள்ள ஒரு நபர் குறித்து பொலிஸார் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த பொதுமக்கள் பாதுகாப்பு அறிவுறுத்தலில், பாலியல் பலாத்காரம், குற்றங்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் விடுத்தமை உள்ளடங்கலாக பல்வேறு குற்றங்களில் கைதாகி சிறைத் தண்டனை அனுபவித்த நபர், தண்டனைக் காலம் நிறைவடைந்து வெளியாகின்ற போதிலும், அவர் மீண்டும் குற்றம் புரிவதற்கான ஆபத்துக்கள் இருப்பதன் காரணமாக, பொது மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நபர் தொடர்ந்து பொலிஸாரின் கண்காணிப்பில் இருப்பார் எனவும் அந்த அறிவுறுத்தலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நபரின் கடந்த கால குற்ற வரலாற்றை நோக்குமிடத்து, அவரைப் பொது இடத்தில் காணும் சந்தர்ப்பத்தில் பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் எனப் பொலிஸார் எச்சரித்துள்ளனர்.





# உக்ரைன் போர் ஆரம்பித்த இடங்களை நேரில் பார்வையிட்டார் பிரதமர் ட்ரூடோ


ஒன்ராறியோ,பெப்.25

உக்ரைனுக்கு விஜயம் செய்துள்ள கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, இரண்டு வருடங்களுக்கு முன்னர் முதலாவது போராட்டம் இடம்பெற்ற இடங்களைப் பார்வையிட்டுள்ளார்.

இந்த விஜயத்தின் போது உக்ரைனுடன், 320 மில்லியன் டொலர்கள் பெறுமதியான புதிய உடன்படிக்கையில் இரு நாட்டுத் தலைவர்களும் கையெழுத்திட்டனர்.

சர்வதேச சமூகம் உக்ரைனுக்கு ஆதரவாக இருக்கின்றது என்பதனை வெளிப்படுத்தும் முகமாக, வெளிநாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் உக்ரைன் – ரஷ்யா நாடுகளுக்கு இடையிலான யுத்தத்தின் இரண்டு வருட நிறைவைக் குறிக்கும் தினத்தில் உக்ரைன் தலைநகரிற்கு விஜயம் செய்துள்ளனர்.

கனேடியப் பிரதமரின் விஜயத்தின் போது, ஐரோப்பிய ஆணைக்குழுவின் தலைவர், இத்தாலியப் பிரதமர், மற்றும் பெல்ஜிய பிரதமர் ஆகியோர் விஜயம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. யுத்தம் ஆரம்பித்தது முதல், பிரதமர் ட்ரூடோ மூன்று தடவைகள் உக்ரைனுக்கு விஜயம்செய்துள்ளமைகுறிப்பிடத்தக்கது.



# உக்ரைன் புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு பிரெஞ்சு மொழித் தகைமை பெறுவதில் சிரமம்

## கியூபெக்கில் அவர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடி

கியூபெக்,பெப். 25

கியூபெக்கில் உள்ள உக்ரைன் புகலிடக் கோரிக்கையாளர்கள் பிரெஞ்சு மொழித் தகைமை தொடர்பில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் உக்ரைனில் ஆரம்பித்த யுத்தத்தைத் தொடர்ந்து தமது பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக கனடாவை நோக்கி நகர்ந்த இன்னா கொன்சுக்வா எதிர்காலம் குறித்த ஸ்திரமற்ற நிலையில் தாங்கள் இருக்கிறார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் தமது சொந்த நாட்டிற்கு சென்று வாழ வேண்டும் என்ற ஆர்வத்துடன் இருக்கின்ற போதிலும், தமது பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக கனடாவில் கடும் சிரமங்களின் மத்தியில் வாழ்ந்திருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைன் யுத்தம் எப்போது நிறைவு பெறும் என்பது தொடர்பில் நிச்சயத்தன்மை இல்லாத நிலையில், தற்போது பிரெஞ்சு மொழி கற்று வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

உக்ரைனில் இருந்து வெளியேறி கனடாவில் புகலிடம் கோரியுள்ள பெரும்பாலானவர்கள் கியூபெக்கில் இருக்கின்ற போதிலும், பிரெஞ்சுச் தகைமை என்பது அவர்கள் அடுத்த கட்டத்தை நோக்கி நகர்வதற்கு பெரும் தடையாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

**பட்டுப்பாதைத்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீனத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

வறுமையை எதிர்த்துப் போராடுவதற்கும், உலகளாவிய காபன் வெளியேற்றத்தை குறைப்பதற்கும் இது பெரும் துணையாக இருக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பட்டுப்பாதை திட்டம் என்பது அபிவிருத்தியடைந்த நாடுகளின் பொருளாதாரத்தில் ஸ்திரமற்ற நிலையை ஏற்படுத்தும் என சில நாடுகள் குற்றம் சாட்டுவதனையும் அவர் மறுத்துள்ளார். பட்டுப்பாதை போன்ற திட்டங்களில் கனடாவின் முதலீடு என்பது அதன் மீதான அங்கீகாரத்தை அதிகரிக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

# எரைவ்கென் செயலி தொடர்பான முறைகேடுகள் மத்திய தகவல் கண்காணிப்பு மையம் விசாரணை




ஒன்ராரியோ,பெப்.25

மத்திய தகவல் கண்காணிப்பு மையமானது எரைவ்கென் செயலியின் பெரும் முறைகேடுகள் தொடர்பிலான ஆவணங்கள் அழிக்கப்படுதல் குறித்த குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் எரைவ்கென் செயலி குறித்து தகவல்களை கோரல் மற்றும் பெறுதல் சார்ந்து தகவல் வெளிப்பாட்டுச் சட்டத்தின் ஒம்புட்ஸ்மன்னாக இருக்கும், தகவல் ஆணையாளர் கரோலின் மேநார்ட் இதனைத் தெரிவித்துள்ளார்.

தகவல் வெளிப்பாட்டுச் சட்டத்தின் சரத்துகள், குறித்த தகவல்களினைப் பாதுகாப்பதற்கான உறுதிப்பாடுகளை உள்ளடக்கியுள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.

கொவிட்-19 பெருந்தொற்று காலப் பகுதியில் மத்திய அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட எரைவ்கென் செயலியின் அறிமுகப்படுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் தொடர்பில் இடம்பெற்றுள்ள முறைகேடுகள் அண்மைக்காலமாக பிரதான பேசுபொருளாக மாறியுள்ளமை குறிப்பிடத் தக்கது.




# உலக கனிஷ்ட ஹொக்கி சாம்பியன்ஷிப் 2027 இல் அல்பேர்ட்டா மாநிலத்தில்!

அல்பேர்ட்டா, பெப்.25

2027ஆம் ஆண்டு உலக கனிஷ்ட ஹொக்கி சாம்பியன்ஷிப் போட்டிகள் அல்பேர்ட்டா நகரில் நடைபெறவுள்ளன.


ஆனாலும், 2027ஆம் ஆண்டு உலக கனிஷ்ட ஹொக்கி சாம்பியன் ஷிப் எந்த நகரில் நடைபெறும் என்பது குறித்த விடயம் இதுவரை தீர்மானிக்கப்படவில்லை.

அதேவேளை, 2024ஆம் ஆண்டின் உலக பரா ஹொக்கி சாம்பியனஷிப் போட்டிகள் மே மாதம் 4ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை கல்கரியில் நடைபெறவுள்ளன.

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் அல்பேர்ட்டா மாநிலமானது சர்வதேசப் போட்டிகளை நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உள்ளூர் ஆளுமைகள் மற்றும் வர்த்தகங்களுக்கு இவ்வாறான சர்வேதச போட்டிகள் சிறந்த சந்தரப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்கும் என ஹொக்கி கனடாவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

# கனேடிய மக்களுக்கு இவ்வருடம் நிதிசார்ந்த நிவாரணம் கிட்டுமாம்



ஒன்ராறியோ,பெப்.25

கனேடிய மக்கள் இந்த வருடத்தின் நடுப்பகுதியில் நிதிசார்ந்த நிவாரணத்தை அனுபவிப்பார்கள் என கனேடிய மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கனடாவின் பணவீக்கமானது மிதமான வேகத்தில் வீழ்ச்சியடைந்து வருவதால், எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் வரி வீதமானது குறிப்பிடத்தக்களவு குறைவடையும் என மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

கனடாவின் அண்மைக் கால நிதிக் கொள்கைகள் மக்கள் மீது பெரும் சுமையை ஏற்படுத்தியுள்ளதை ஏற்றுக் கொண்டுள்ள கனடாவின் மத்திய வங்கியானது, மக்களுக்கு விரைவில இதிலிருந்து நிவாரணம் கிடைக்கும் என தெரிவித்துள்ளது.

இதன் விளைவாக, அடுத்த வருட இறுதியில் வங்கியின் வரிவீதங்கள் 5 சதவீதத்தில் இருந்து, 2.5 சதவீதமாக வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.




# கொங்கோவில் அரசியல் ஸ்திரமற்ற நிலைமையை முடிவுக்குக் கொண்டு வர கனடா உதவ வேண்டும்!

## வின்னிபெக்கில் அணிதிரண்டவர்கள் கோரிக்கை

மனிடோபா,பெப்.25

கனேடிய கொங்கோ மக்கள் தாய் நாட்டில் அதிகரித்துள்ள அரசியல் ஸ்திரமற்ற நிலையை முடிவுக்குக்கொண்டு வருவதற்கு உதவவேண்டும் எனக் கனேடிய அரசாங்கத்திடம் கோரியுள்ளனர்.

கொங்கோ ஜனநாயகக் குடியரசில் பல தசாப்தங்களாக நீடிக்கும் உள்நாட்டு யுத்தம் மிகவும் மோசமான கட்டத்தை அடைந்துள்ளதால், ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்தும், கொல்லப்பட்டும் வருவதால் கனேடிய அரசாங்கம் உடனடியாக இது குறித்து உதவி வழங்குவதற்கு முன்வர வேண்டும் என வின்னிபெக்கில் அணிதிரண்ட கனேடிய கொங்கோ மக்கள் தெரிவிக்கின்றனர்.

வின்னிபெக் மனித உரிமைகள் அருங்காட்சியகம் அருகில் அணிதிரண்ட சுமார் 200 பேர், மனிடோபா மாநிலங்களவை கட்டடம் வரை நடைபவனியாக சென்றுதமது கோரிக்கைகளை முன்வைத்தனர்.